**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 2/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ**.**சா**. 18**
**Defence**
**Court**

Name : சுப்பிரமணி

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 17.03.2022

முதல் விசாரணை:

நான் தற்போது கோவில்பட்டியில் குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பு தென்காசியில் எல்.ஆர்.எஸ்.பாளையம் சந்திப்பில் முத்து டீ ஸ்டால் என்ற பெயரில் டீக்கடை நடத்தி வந்தேன். எனக்கு இவ்வழக்கு பற்றி எதுவும் தெரியாது. இவ்வழக்கின் எதிரிகள் யாரையும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின் போது நான் தென்காசி கூளக்கடை பஜார் எல்.ஆர்.எஸ் பாளையம் சந்திப்பில் நானும், என் தம்பியும் டீக்கடை நடத்தி வருவதாகவும் எங்கள் ஊரில் 17.12.2006 ம் தேதி குமார்பாண்டியன் என்பவர் கொலைசெய்யப்பட்டதால் அது தொடர்பாக இருதரப்பினருக்கும் முன்விரோதம் இருந்து வந்தது என்றும், என் கடைக்கு டீகுடிக்க வரும் நபர்கள் அது சம்மந்தமாக பேசிக்கொண்டிருப்பார்கள் என்றும் கூறியிருக்கிறேன் என்றால், சரியல்ல. வழக்கம் போல 14.8.2007 ம் தேதி காலையில் சுமார் 10.15 மணிக்கு என் கடைக்கு வெளியே முத்தராரம்மன் கோவில் தென்புறம் சத்தம் கேட்ட போது நான் எட்டி பார்த்தேன் என்றும் அப்போது ஒரு அம்பாசிட்டர் காரும், ஒரு இருச்சக்கர வாகனமும் கீழே கிடந்தது என்றும், தென்காசி மலையான் கோவில் தெருவைச் சேர்ந்த சேகரை இரண்டு ஆட்டோக்களில் வந்த நபர்களில் ஹனிபா என்பவர் அருவாளால் வெட்டியும், முருகேசன் என்ற அப்துல்லா அருவாளால் வலது முழங்கை மற்றும் இடது முழங்கை பகுதியில் வெட்டியும், அசன்கனி கத்தியால் குத்தியும், அபு ஹயுப் அன்சாரி மற்றும் ராஜா முகமது அருவாளால் வெட்டியும் கொலை செய்தார்கள் என்றும் அதை நான் நேரில் பார்த்தேன் என்றும் சேகரின் அண்ணன் சக்திபாண்டியன் மற்றும் அவரது கூட்டாளிகளை வேறு சிலம் தாக்கி காயப்படுத்தினார்கள் என்றும் சம்பவத்தை கண்டு பயந்து நான் கடையை மூடிவிட்டு ஓடிவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகள் பயந்து பொய்சாட்சி கூறுகிறேன் என்றால், சரியல்ல. சாலை முகப்பில் டீக்கடை உள்ளதால் சாலையில் நடக்கும் விவரங்கள் சம்பவங்கள் தெரியும் என்றால், சரிதான். காலை 7.00 மணிக்கு டீக்கடையை திறப்போம். டீக்கடையில் சாலையில் நடக்கும் அசாதாரண சம்பவங்கள் எதையும் பார்த்துவிடுவேன். சம்பத்தன்று 7.00 மணிக்கு கடைக்கு வந்தேன். காலை 7.00 மணிக்கு கடையை திறந்து 9.00 மணிக்கு கடையை மூடிவிட்டேன் அன்றைய தினம் நான் டீ மாஸ்டராக வேலை செய்ய வில்லை. கலவரம் நடந்ததாக நாளிதழில் செய்தி பார்த்தேன். நான் கடை வைத்திருந்த கடை வீதியில் கலவரம் நடந்ததாக செய்தி இருந்தது அதனால்

நான் கடையை திறக்க செல்லவில்லை. இறந்த போன சேகரின் உடலை என் கடையின் முன்பாக கைப்பற்றியதாக நான் எதையும் கேள்விபடவில்லை. பிரேத விசாரணையின் போது நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. நான் 14.8.2007 ம் காலை 10.15 மணிக்கு கடையில் இருந்த போது தான் சம்பவம் நடந்தது என்றும் எனக்கு எதிரிகளையும், இறந்து போன சேகரையும், சக்திபாண்டியனையும் தெரியும் என்றும் இவ்வழக்கிற்காக வேண்டுமென்றே சம்பவம் பற்றி தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**